# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No. 30/2024**

**PW10**

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராஜ் |
| Father's Name | : | குப்பன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.08.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை நகர நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 09.12.2022 அன்று போளூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண். 409/2022 வழக்கில் இறந்துபோன மணிகண்டன் த .பெ சிவக்குமார் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்தை ஆய்வாளர் என்னிடம் கொடுத்தார் . அந்த கடித்தை எடுத்துக்கொண்டு சென்னை ராஜிவ்காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சட்டம் சார்ந்த மருத்துவர் நரேந்தர் என்பவரிடம் கொடுத்து சவக்கிடங்கில் இருந்த பிரேதத்தை அடையாளம் காட்டினேன் . மருத்துவர் பிரேத பரிசோதனை செய்தபின்பு பிரேதத்தையும், கூராய்வு செய்தபோது எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளையும் என்னிடம் ஒப்படைத்தார். பிரேதத்தை மணிகண்டனின் தந்தையிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட உள்ளுறுப்புகள் 6 குப்பிகளுடன் சீல்வைக்கப்பட்ட தபாலை பெற்றுக்கொண்டு வேலூர் வட்டார தடய

அறிவியல் ஆய்வகத்தில் ஒப்புவித்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன் . இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு ஒப்படைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு விசாரணையில் சொல்லவில்லை . பிரேத விசாரணை சென்னை ராஜிவ்காந்தி மருத்துவமனையில்தான் செய்யப்பட்டது . நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C . Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.